117

சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை-உழவர் நலத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி ஆர்.சுஜிதா என்பவரின் பணியினை 24.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை

அரசாணை (3டி) எண்.45

நாள்:06.05.2022
சுபகிருது வருடம்
சித்திரை திங்கள் 23,
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.312, வேளாண்மைத் (வேநி.9) துறை, நாள் 27.12.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
3. வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண் அநிபி8 / 9991 / 2022, நாள் 18.03.2022.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தர்மபுரி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் பென்னாகரம், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 09.06.2001 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) கா.இராமச்சந்திரன் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகள் செல்வி ஆர்.சுஜிதா என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 055 / 2016, நாள் 12.02.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்து, தனியருக்கு உரிய பணியிட ஆணை வழங்கும் பொருட்டு சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அபபி3 / 3287 / 2021-3, நாள் 15.02.2021-ன்படி, தனியர், செங்கல்பட்டு, தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) 24.02.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி ஆர்.சுஜிதா என்பவரின் பணியினை 24.02.2021 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண் 7206 / க்யூ.1 / 2022-1, நாள் 22.04.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண் 2324044 / ஜி1 / 2022, நாள் 29.04.2022--இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
செல்வி ஆர்.சுஜிதா, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)
வழி: வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 6985 / வேநி9 / 2022
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

21/6/22